# பாட்டாளி சிந்தனை

Volume 33 No 5 — சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

January 2023 — தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் — விலை ரூ 5




உயர்ந்த மனிதர்களை மறந்து வருவதால்தான் அரசியல் இயக்கங்களிலும் வெகுஜன இயக்கங்களிலும் கலை–இலக்கியத் துறைகளிலும் ஒரு காலத்தில் குறிப்பிடத்தக்க உயரத்தை எட்டியிருந்த கலாச்சாரம், ஒழுக்கம், நெறிமுறைகள் அவற்றின் தரத்திலிருந்து தொடர்ந்து வீழ்ந்து வருகின்றன. அதனால்தான் நாம் வேரற்றவர்களாகி விட்டோம். சுதந்திரப் போராட்ட நாட்களில் பெற்றிருந்த செழுமையான கலாச்சார வடிவத்தின் தொடர்ச்சியை நாம் காக்கத் தவறி வருகிறோம். பேசுவதற்கு இனிமையான சொற்றொடர்கள் பலவற்றை கடந்தகால மாமனிதர்களிடமிருந்து பெற்றுக் கொண்டோம். ஆனாலும் நம் நாட்டில் வளர்த்தெடுக்கப்பட்ட உயர்ந்த கலாச்சார சுருதியின் தொடர்ச்சியைக் காப்பதில் நாம் தவறிவிட்டதாகவே தெரிகிறது. அந்தத் தொடர்ச்சியை மீண்டும் ஏற்படுத்தியாக வேண்டும்.

**– சிப்தாஸ் கோஷ்**

# மக்கள் இயக்கங்களைப் பற்றிய அணுகுமுறை

**– சிப்தாஸ் கோஷ்**

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளரும் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள், ஆகஸ்ட் 5, 1923 அன்று பிறந்து ஆகஸ்ட் 5, 1976ஆம் ஆண்டு மறைந்தார். அவரது பிறந்த நூற்றாண்டை இவ்வாண்டு முழுதும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி அனுசரித்து வருகிறது. இந்நூற்றாண்டையொட்டி, மக்கள் இயக்கங்களை சரியாக வழிநடத்துவது பற்றிய அவரது சில கருத்துக்களைக் கீழ்கண்டவாறு தருகிறோம்.*

இந்நாட்டு மக்கள் மீண்டும் மீண்டும் பலமுறை போராட்டங்களில் வெடித்தெழுந்துள்ளனர் என்பது வரலாறு அறிந்தவர்களுக்குத் தெரியும். நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும்கூட, பல போராட்டங்களில் ஈடுபட்டு மக்கள் எத்தனை தியாகங்கள் செய்திருக்கிறார்கள், எந்த அளவிற்கு இரத்த ஆறு ஓடியிருக்கிறது, எத்தனை முறை தொழிலாளர்களும் விவசாயிகளும் இளைஞர்களும் மாணவர்களும் இன்னுயிர் ஈந்திருக்கிறார்கள்! புரட்சிக்கான உத்வேகத்தோடு எவ்வாறெல்லாம் இந்நாட்டு மக்கள், இயக்கங்களில் ஈடுபட முன்வந்து, மரணத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள்! ஆனால் இறுதி விளைவு என்ன? போராட்டங்களின் மூலம் பெற்றிருப்பது முன்னேற்றத்தைவிட பிற்போக்குத்தனமே என்று பெரும்பாலனோர் தற்போது கூறுகிறார்கள். மக்களின் ஜனநாயக இயக்கங்கள்மீது ஆளுவோரால் ஒடுக்குமுறை பாசிசத் தாக்குதல்கள் ஏவப்படுகின்றன.

ஏன் இப்படி நடந்தது? எவ்வாறு இப்படி நடக்கமுடியும்? ஜனநாயக இயக்கங்களின் வளர்ச்சி இந்நேரம் முதலாளித்துவ சுரண்டல் ஆட்சியாளர்களுக்கு முடிவு கட்டியிருக்க வேண்டுமல்லவா? புரட்சியின் வெற்றிக்கொடி இந்நேரம் நாட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், புரட்சியின் வெற்றிக்கு அத்தியாவசியத் தேவையான மக்களின் பரந்துபட்ட ஆதரவு என்பது போராட்டங்களுக்குக் கொடுக்கப்பட்டது. தலைவர்களின் அறைகூவலுக்கு செவிமடுத்து புரட்சிக்கான ஏக்கத்தோடு ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் முன்வந்து இயக்கங்களில் குதித்தார்கள். அவ்வாறிருக்க, பிற்போக்குத்தனம் எவ்வாறு பலம் பெற்றது? புரட்சிகர இயக்கம்தான் பலம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் நேர்மாறாக ஏன் நடந்தது?

ஏனெனில், இயக்கங்களில் மக்கள் குதித்தபோது புரட்சிகர விழிப்புணர்வின் அடிப்படையில் குதிக்கவில்லை. புரட்சிகரக் கட்சியை கட்டி வளர்ப்பதற்கும், புரட்சியை நடத்துவதற்கும் தேவையான அன்றாட போராட்டங்களை நடத்துவதற்கான மனப்பான்மை, பொறுமை, விழிப்புணர்வு, அர்ப்பணிப்பு ஆகியவை அவர்களிடத்தில் இல்லை. அதே சமயம், அவர்கள் ஆயிரக்கணக்கில்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# நேதாஜியின் 125வது பிறந்த ஆண்டு நிறைவு நிகழ்ச்சியை சிறப்பாகக் கொண்டாடுவோம்



இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சமரசமற்றப் போக்கின் தீரமிக்க மாபெரும் போராளி நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 126வது பிறந்தநாள் ஜனவரி 23, 2023இல் வருவதை நீங்கள் அறிவீர்கள். நேதாஜியின் 125வது பிறந்த ஆண்டு நிறைவை வரும் ஜனவரி 2023இல் மிகச் சிறப்பாகக் கொண்டாட எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி தனது எல்லா வர்க்க, வெகுஜன அமைப்புகளையும் தொண்டர்களையும் ஆதரவாளர்களையும் கேட்டுக் கொண்டுள்ளது. ஏனெனில், வருங் காலத்தில் நாட்டில் ஜனநாயக இயக்கங்களையும், இறுதியாக சோசலிசப் புரட்சியையும் நடத்த, சுதந்திரப் போராட்ட வரலாற்றை வர்க்கக் கண்ணோட்டத்தில் மக்களிடம் எடுத்துச் செல்ல நேதாஜியின் போராட்ட வாழ்க்கை மிக முக்கியமானதாகும்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மிதவாதப் போக்கு என பரவலாகக் குறிப்பிடப்படும் சமரசவாதப் போக்கும், தீவிரவாதம் எனக் குறிப்பிடப்படும் சமரசமற்ற போக்கும் நிலவியதை நாம் அறிவோம். சமரசவாதப் பிரிவினருக்கு காந்தி தலைமை தாங்கினார். சமரசமற்ற போராட்டத்திற்கு நேதாஜி தலைமை வகித்தார். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்துகொண்டு காந்தியவாதிகள் அரசியல் சுதந்திரத்தை இந்திய முதலாளித்துவ வர்க்கத்திற்குப் பெற்றுத் தந்தனர். மாறாக, சமூகம், கலாச்சாரம், அரசியல் என அனைத்துத் துறைகளிலும் முற்றிலும் ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்கப் போராடிய பகத்சிங், நேதாஜி போன்றோரை ஆங்கிலேயர்கள் மட்டுமல்ல இந்திய முதலாளித்துவ வர்க்கமும் அதன் நலனைப் பிரதிபலித்த காந்தியவாதிகளும் மக்கள்முன்பு விரோதிகளாகச் சித்தரித்தனர்.

இரண்டாம் உலகப் போரில் இங்கிலாந்து அமெரிக்கா சோவியத் ரஷ்யாவின் நேச நாடுகளின் கூட்டணியை ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் அச்சு நாடுகளின் கூட்டணி எதிர்த்துப் போராடியபோது, எதிரியின் எதிரி நண்பன் என்ற யுத்த தந்திரத்தைப் பயன்படுத்தி ஜெர்மனி மற்றும் ஜப்பான் உதவியைப் பெற்று ஆங்கிலேய ஆட்சியாளர்களை ராணுவரீதியாக நேதாஜி எதிர்த்தார். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய ஃபாசிச நாடுகளுடன் எப்படி அவர் கைகோர்க்கலாம், எனவே நேதாஜியும் ஃபாசிச ஆதரவாளர் என விழிப்புணர்வு கூர்மையற்றவர்கள் நினைத்ததைப் போலவே, அன்று

தொடர்ச்சி 7ம் பக்கம்

# கல்வியை வணிகமயமாக்கும் தமிழக அரசாங்கத்தின் நான் முதல்வன் திட்டம்

தமிழத்தில் நான் முதல்வன் என்ற பெயரில் உயர்கல்வியில் அனைத்து பிரிவுகளிலும் தொழிற்பாடப்பிரிவுகளை, பாடங்களை அதீத வேகத்தில் தமிழக அரசாங்கம் திணித்து வருகின்றது. தொழிற்கல்விக்காக பொறியியல் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, பட்டயம், சான்றிதழ் படிப்புகள் ஏற்கனவே தனியாக உள்ளன. ஆனால் பொறியியல் படித்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. அவர்கள் வேலை செய்யத் தகுதியில்லாதவர்களாக இருக்கிறார்கள் என்ற பெயரில் தொழிற்கல்விப் பாடத் திட்டத்தையே முழுமையாக மாற்றும் முயற்சியில் அண்ணா பல்கலைக்கழகம் முதலில் இறங்கியது

12.8 லட்சம் மாணவர்கள் நான் முதல்வன் திட்டத்தில் பதிவு செய்துள்ளதாகவும் அவர்களுக்கு பயிற்சியளித்து கார்ப்பொரேட்டுகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று முதல்வர் தெரிவித்துள்ளார். கார்ப் பொரேட்டுகளுக்கு என்னென்ன திறன்கள் வேண்டும் என்று கூறினால் அந்த பயிற்சிகளை அரசாங்கமே அனைவருக்கும் வழங்க ஏற்பாடு செய்யும். அவர்களை கார்ப்பொரேட் நிறுவனங்கள் வேலைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தமிழ்நாடு திறன்மேம்பாட்டு கழகம் தெரிவித்துள்ளது. கார்ப்பொரேட்டுகள் பேசும் திறன் என்பது அவ்வப்போது மாறிக்கொண்டிருக்கிறது. வேலையின்மைக்கு திறன் இல்லை என்று கூறுவது பொய்யான வாதமாகும்.

பொதுவான படிப்புகளை பொதுக்கல்வியில் வழங்கிய பிறகு கூடுதல் திறன்கள் தேவைப் பட்டால், யாருக்கு வேண்டுமோ அவர்களுக்கு திறன் மேம்பாடு வழங்குவது வேறு. ஆனால் கல்வி முழுவதிலும் திறன் மேம்பாட்டைத் திணிப்பது பொதுக்கல்வியை புறந்தள்ளிவிட்டு வெறுமனே வேலைக்கான பயிற்சி அளிக்கும் கூடாரங்களாக உயர்கல்வி நிறுவனங்களை மாற்றிவிடும். அப்படி பயிற்சி பெற்றவர்களுக்கு இப்படிப்பட்ட ஊதியத்தில், இத்தனை பேருக்கு நிரந்தரமான வேலை கிடைக்குமென்று அரசாங்கமோ, கார்ப்பொரேட்டுகளோ உறுதியளிக்க முடியுமா?

உயர்கல்வி முழுவதும், குறிப்பாக அரசு கல்லூரிகளில் இப்படிப்பட்ட திறன்மேம்பாட்டு கல்வி என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்படும் பயிற்சிகள், கற்றல் கற்பித்தல் பணிகளை கடுமையாகப் பாதிக்கும். சாமானிய ஏழை எளிய குடும்பத்து மாணவர்கள் இனி உயர் ஆராய்ச்சிக்கு செல்வதை தடுத்துவிடும். அரசு கல்லூரிக்கு வந்தால் ஏதோ வேலைவாய்ப்பு பயிற்சி மட்டுமே அளிக்கப்படும் என்ற நிலையை உருவாக்கிவிடும். ஆராய்ச்சி படிப்புவரை செல்ல விரும்பினால் தனியாருக்கு செல்லுங்கள் என்று மறைமுகமாக அரசு கல்லூரிகளிலிருந்து மாணவர்களை வெளியேற்றுவதற்கும் வழிவகுத்துவிடும்.

அந்தப் படிப்புகளை இணையவழியிலோ, நேரடியாகவோ, கலப்பு முறையிலோ நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. இந்த படிப்புகளை தனியார் மூலமாக வழங்க முயற்சித்திருப்பது ஒட்டுமொத்த அரசு பொறியியல் கல்லூரிகளையும் தனியார் மயமாக்குவதற்கான தொடக்கமோ என்ற சந்தேகம் எழுகிறது.

மேலும், இந்தத் திட்டத்தை அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்த உள்ளதாகவும் அதற்கான பாடத்திட்டங்கள் ஏற்கனவே தயாராகிவிட்டதாகவும், 14 பாடங்களை நடத்துவதற்கு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்ட ரூ54 கோடிகள் ஒதுக்கப்பட்டு விட்டதாக வரும் செய்திகள் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

இப்படி ஒரு திட்டம் கொண்டுவரலாமா என்பதற்காக மாணவர்களிடம் கருத்துக்கேட்பு நடத்தப்பட்டது. ஆனால் அதேநேரத்தில் இவற்றை அமல்படுத்துவதற்காக ஏற்பாடுகளை முன்கூட்டியே அரசாங்கம் செய்திருப்பதை பார்க்கும் போது அது ஒரு நாடகம் என்பது அம்பலமாகிறது. இது முற்றிலும் ஜனநாயக விரோத நடவடிக்கையாகும்.

ஏற்கனவே தேசிய கல்விக் கொள்கை 2020, ஆறாம் வகுப்பு முதல் உயர்கல்வி வரையில் கல்வி முழுவதையும் தொழில்மயமாக்குவதற்கு பரிந்துரைத்துள்ளது. தேகொ 2020ஐ எதிர்ப்பதாக கூறி தமிழ்நாட்டிற்கென தனி கல்விக் கொள்கையை கொண்டுவர தமிழக அரசாங்கம் ஒரு குழுவை அமைத்துள்ளது. ஆனால் அந்த குழு முடிவெடுக்கும் முன்பாகவே தேசிய கல்விக் கொள்கை 2020ன் பல்வேறு ஷரத்துக்களை தமிழக திமுக அரசாங்கம் தொடர்ந்து அமல்படுத்து வருகிறது. இது தேர்தலில் அவர்கள் கொடுத்துள்ள வாக்குறுதிக்கு மாறானதாகும். கல்விக்கு செய்யும் துரோகமாகும்.

மனிதனை மனிதனாக்க வேண்டிய அறிவியல்பூர்வ, ஜனநாயகபூர்வ மதச்சார்பற்ற கல்விக்கு மாற்றாக கார்ப்பொரேட்டுகளிடம் வெறுமனே வேலை செய்யத் தகுதிபடைத்த, சிந்தனைத்திறனற்ற ரோபோட்டுகளாக மாணவர்களை மாற்றுவதற்கான இத்திட்டத்தை அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO) வன்மையாகக் கண்டிக்கிறது.

இத்திட்டத்தின் அபாயத்தை உணர்ந்து இதனை முறியடிக்க மாநிலத்தில் உள்ள கல்வியை நேசிக்கக்கூடிய அனைவரும், குறிப்பாக மாணவர்கள் ஒன்றுபட்டு போராட முன்வரு மாறும் ஏஐடிஎஸ்ஓ அறைகூவி அழைக்கிறது ■

# விழுப்புரம் மாவட்டத்தில் ஏஐயுடியுசி தொழிற்சங்கம் அமைப்பு





**இடது: ஏஐயுடியுசி தமிழ்நாடு மாநிலத் தலைவர் தோழர் அ அனவரதன் தொழிற்சங்கக் கொடியேற்றுகிறார்.**
**வலது: பெயர்ப்பலகையின் முன்பாக தலைவர்கள் மற்றும் சங்க நிர்வாகிகள்**

08.12.2022 வியாழனன்று இன்டெர்னேஷனல் பேக்கரி ப்ராடக்ட்ஸ் லிமிடெட், ஆரோபுட் ஆலையின் எதிரில் அந் நிறுவனத்தில் பணியாற்றுகின்ற சுமைப்பணித் தொழிலாளர் கள் சங்க (ஏஐயுடியுசி) கொடியேற்று விழா மற்றும் பெயர்ப்பலகைத் திறப்பு விழா நிகழ்ச்சி 08.12.2022 அன்று காலை 08.00 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியானது சங்கத்தின் தலைவர் தோழர் கே எழுமலை, செயலாளர் தோழர் இ எழுமலை தலைமையில் நடைபெற்றது. ஏஐயுடியுசி–ன் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் வி சிவகுமார் மற்றும் அதன் மாநிலத் தலைவர் அ அனவரதன் ஆகியோர் உரையாற்றினர்.

மேலும் ஏஐயுடியுசி–ன் புதுச்சேரி மாநிலச் செயலாளர் தோழர் எஸ் சிவக்குமார், பொதுத் தொழிலாளர் மையச் சங்கத்தின் மாநில அலுவலகச் செயலாளர் தோழர் பி மோகன் மற்றும் சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர் ■

# பில்கிஸ் பானு குற்றவாளிகள் விடுதலையைக் கண்டித்து ஏஐஎம்எஸ்எஸ்

பில்கிஸ் பானுவின் வழக்கில் குற்ற வாளிகளின் விடுதலையைத் திரும்பப் பெறக்கோரியும் அவர்கள் இறக்கும் வரை ஆயுள் தண்டனை வழங்க கோரியும் அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் அறை கூவலுக்கிணங்க நாடெங்கிலும் தெருமுனைக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. அதன் ஒரு பகுதியாக நெய்வேலியில் நடைபெற்ற பிரச்சார இயக்கம் ■



**நெய்வேலி**

# பயிர்க் காப்பீட்டுத் தொகை, வறட்சி நிவாரணம் கோரி அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் (ஏஐகேகேஎம்எஸ்) தலைமையில் விவசாயிகள் போராட்டம்

புதுக்கோட்டை மாவட்டமானது கிட்டத்தட்ட ஆற்றுப்பாசனம் ஏதுமற்ற ஒரு வறண்ட பகுதியாகும். இம்மாவட்ட விவசாயிகள், குறிப்பாக ஆவுடையார்கோவில் தாலுகா மற்றும் மணமேல்குடி தாலுகா விவசாயிகள் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இப்பகுதியில் நடைபெறும் விவசாயம் முற்றிலும் மானாவாரி விவசாயமாகும். சில பகுதிகளில் மழை முறையாகப் பெய்து கண்மாய்கள், குளங்கள் நிரம்பினால்தான் விவசாயம் ஓரளவிற்கு நடைபெறும். கண்மாய் இல்லாத பகுதிகள் வானம் பார்த்த பூமியாகத்தான் இருக்கும். பயிர்கள் முற்றும் வரையில் மழை தொடர்ந்தால்தான் இங்கு விவசாயத்தில் ஏதாவது பலன் கிடைக்கும். ஒரு வருடம் மழை பொய்த்துவிட்டால் விவசாயம் செய்வதை இப்பகுதி விவசாயிகள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

மேலும் இன்றைய காலகட்டத்தில் பருவ நிலை தலைகீழாக மாறிவிட்டது. முந்தைய கால கட்டத்தைப்போல் பருவநிலை மாற்றங்கள் சீராக நிகழ்வது இல்லை. ஒன்று, ஆண்டு முழுவதும் மழை பெய்யாமல் போய்விடுகிறது. அல்லது கடும் மழை பெய்து விவசாயத்தை அழித்துவிடுகின்றது. இப்படி யிருக்கையில், மழையை நம்பி இப்பகுதியில் விவசாயம் செய்த விவசாயிகள் கடந்த ஆண்டுகளில் பெரும் நஷ்டத்தைச் சந்தித்தனர். அப்படித்தான் நடப்பாண்டும் (2022) மழை பொய்த்து, கதிர்விடும் நிலையில் இருந்த விளை நிலங்கள் வற்றி, வறண்டுபோய், வேறு வழியில்லாமல் அதில் ஆடு மாடுகளை விட்டு நெற்பயிர்களை மேயவிடும் நிலைமைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கின்றனர். அடிமேல் அடியாக இவ்வாண்டும் உரிய நேரத்தில் மழை சரியாகப் பெய்யாததால், குறிப்பாக மணமேல்குடி தாலுகா கோட்டைப்பட்டினம் பிர்கா சுற்றுவட்டாரப் பகுதிகளிலுள்ள கிராமங்கள் மற்றும் ஆவுடையார்கோவில் தாலுகாவிலுள்ள மீமிசல் பிர்கா சுற்றுவட்டாரப் பகுதிகளிலுள்ள கிராமங்களின் நெல் வயல்கள் வறண்டு போய் விட்டன.

பல ஆண்டுகளாகவே விவசாய இடு பொருட்களான விதை, உரம், பூச்சி மருந்து போன்றவற்றின் விலைகள் கடுமையாக அதிகரித்துக்கொண்டிருக்கும் நிலையில், நஷ்டத்தை சந்தித்துக்கொண்டு பெரும்பாலான விவசாயிகள் நிரந்தரக் கடன்காரர்களாக மாறிக் கொண்டிருக்கின்றனர். பொதுவாக ஒரு ஏக்கர் நெல் விவசாயம் செய்ய ரூ.30,000 முதல் ரூ.40,000வரை செலவாகிறது. இவ்வாண்டும் உரிய நேரத்தில் மழை பெய்யாததால் மேலும் நஷ்டமடைந்து, கடன் சுமை மேலும் அதிகரித்து கடும் மன உளைச்சலுக்கு விவசாயிகள் ஆளாகி யிருக்கின்றனர். இந்நிலையில் விளைச்சல் பொய்த்துப்போன நிலங்களின் விவசாயிகளுக்கு போதிய பயிர்க்காப்பீட்டுத்தொகை கிடைத்தால் மட்டுமே அவர்கள் தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபட முடியும்.

பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் 2016 இல் அமலுக்கு வந்த காலம் தொட்டே இப்பகுதி விவசாயிகள் பயிர்க்காப்பீடு முறையாகச் செய்து வருகின்றனர். பெரும் பாலும் தனியார் காப்பீட்டு நிறுவனங்கள்தான் இதில் அங்கம் வகிக்கின்றன. பொதுவாக, காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கோரப்பட்ட 30லிருந்து 45 நாட்களுக்குள் இழப்பீட்டை வழங்கிட வேண்டுமென கூறப் படுகிறது. ஆனால் யதார்த்தத்தில் அவ்வாறு கிடைப்பதில்லை. கடந்த ஆண்டுகளில் சில பகுதி விவசாயிகளுக்கு ஓரளவுக்கு பயிர்க்காப்பீட்டுத் தொகை கிடைத்திருக்கிறது. சில பகுதி விவசாயிகளுக்கு பயிர்க்காப்பீட்டுத் தொகை முறையாகக் கிடைக்கவில்லை. பயிர்க்காப்பீட்டுத் தொகை கிடைக்காத சமயங்களில் இத்தகைய தனியார் காப்பீடு நிறுவனங்களை அணுகுவதில் எண்ணற்ற பிரச்சினைகள் இருக்கின்றன.

மேலும் இப்பிரச்சினைக்கான நிரந்திரத் தீர்வு காணவேண்டுமென்றால், முந்தைய மாநில அரசாங்கத்தால் ஏற்கனவே அடிக்கல் நாட்டப்பட்ட காவிரி வைகை குண்டாறு ஆறுகள் இணைப்புத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். மாநில அரசாங்க மானது, வறட்சி காலங்களில் பயன் பெறும் வகையில் காவிரி மற்றும் வைகை ஆறுகளை கரூர் மாவட்ட மாயனூருக்கும் வைகை ஆற்றுக்கும் இடையே 60 கி.மீ தூரத்தை ஒரு கால்வாய் மூலம் இணைக்கும் திட்டத்தை ஏற்கனவே துவங்கியது. இது முற்றிலும் தமிழ் நாட்டுக்கு உள்ளேயே செயல் படுத்தப் படக்கூடிய சாத்தியமான திட்டமாகும். தற்போதைய மாநில அரசாங்கம் சில மாதங்களுக்கு முன்பாக இதற்கு நிதியும் ஒதுக்கி வேலைகளைத் துவக்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களை உள்ளடக்கிய கிட்டத்தட்ட 3,38,000 (3.38 லட்சம்) ஹெக்டேர் நிலப்பரப்பில் விவசாயம் செய்ய முடியும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இது மட்டு மல்லாமல், இவ்வாறு கொண்டுவரப்படும் தண்ணீர் தொழிற்சாலைத் தேவை, பொதுமக்கள் பயன்பாட்டுத் தண்ணீர்த் தேவையையும் பூர்த்தி செய்யும் என்றும் கூறப்படுகிறது. 256 கி.மீ தொலைவுக்கு போடப்படும் இந்த வாய்க்காலால் எவ்விதச் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பும் ஏற்படாது என்றும் அத்துடன் இத்திட்டத்தால் பொது மக்களை அப்புறப்படுத்தும் வாய்ப்பு இல்லை என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மாநில அரசாங்கம், அனைத்து வகையிலும் சாத்தியக்கூறுகளைக் கொண்டிருக்கும் இத்திட்டத்தை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி தாலுகா விவசாயிகள் பயன் பெற வழிவகை செய்ய வேண்டுமென அகில இந்திய விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தால் 26.12.2021 அன்று நடத்தப்பட்ட ஏஐகேகேஎம்எஸ் (AIKKMS) ஆவுடையார் கோவில் தாலுகா வட்டார மாநாட்டில் ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் நகல்கள் முதலமைச்சர் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

சில நாட்களுக்கு முன்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் வறண்டுபோன நெல் வயல்களைப் பார்வையிட்டுச் சென் றிருக்கின்றனர். ஆனால் இன்றுவரை உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இந்நிலையில் அப்பகுதியில் செயல்பட்டுவரும் எமது அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர் சங்க (ஏஐகேகேஎம்எஸ்) தமிழ்நாடு அமைப்பின் மாநிலத் செயலாளர் தோழர் சுருளியாண்டவர் அவர்கள் விவசாயிகளுக்கு உரிய பயிர்க் காப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்றும் இப்பகுதிகளை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவித்து போதிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் வலி யுறுத்தி மாநில முதலைச்சர், வேளாண்துறை அமைச்சர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு மனு ஒன்றை அனுப்பி யுள்ளார். இது போக, ஆவுடையார் கோயில் மற்றும் மணமேல்குடி தாலுகா வட்டாட்சியாளர்களுக்கும் அதன் நகல்கள் நேரடியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில், அப்பகுதி விவசாயிகள் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து அவர்களது கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் மீமிசல் குடியிருப்புப் பகுதி மற்றும் செய்யானம் கிராமம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில், துண்டுப் பிரசுரம் அச்சடிக்கப் பட்டு ஆட்டோ வாகனப் பிரச்சாரம் ஒன்றை 22.12.2022 அன்று காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடத்தினர். ஏஐகேகேஎம்எஸ் தலைமையில் நடத்தப்பட்ட அந்தப் பிரச்சாரத்தில் பாதிக்கப்பட்ட கிராம மக்கள் அனைவரும் தத்தம் கிராமங்களில் திரண்டு வந்து பேராதரவு தந்தனர். பாதிப்படைந் திருக்கும் கிராம மக்கள் ஒன்றுகூடி உடனடி யாக ஒரு போராட்டக் கமிட்டி அமைப்பதாகத் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது ■







**புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா மீமிசல் பிர்கா மற்றும் மணமேல்குடி தாலுகா கோட்டைப்பட்டினம் பிர்கா சுற்றுவட்டாரக் கிராமங்களில் உரிய பயிர்க் காப்பீட்டுத் தொகையும் வறட்சி நிவாரணமும் கோரிய ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் மத்தியில் ஏஐகேகேஎம்எஸ் தலைவர்கள் உரை**

# மக்கள் இயக்கங்களைப் பற்றிய . . .

*1ம் பக்கத் தொடர்ச்சி*

போராட்டங்களில் குதித்தார்கள். குறிப்பிட்ட தொரு பிரச்சினையின் அடிப்படையில் தோன்றிய போராட்ட இயக்கத்தின் சூழ்நிலை, மக்களை போராட்டத்திற்குள் ஈர்த்தது. ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்கும் அத்தகைய இயக்கங்கள் அடிக்கடி உருவாவதில்லை என்பது உண்மைதான். மக்கள் மனங்களில் வெறுப்புணர்வு வளரும்போது ஏதேனும் ஒரு பிரச்சினையின் வழியாக அது பீறிட்டு எழும். அங்கே தலைமை என்பது இருந்தாலும் சரி, இல்லையாயினும் சரி, போராட்டங்கள் வெடித்தெழும். திடீரென தானாக வெடித்தெழுந்த போராட்டங்கள் சில நாட்களுக்குப்பின் தணிந்துவிடும். மீண்டும் விரக்தி தோன்றும். திடீரென தன்னெழுச்சியான மற்றொரு போராட்டம் வெடித்தெழும்வரை அடக்கு முறையின் கீழ் மக்கள் முனகிக்கொண்டி ருப்பார்கள்.

போராட்டங்கள் தொய்வு கண்டு சிதறிப் போகின்ற அத்தருணத்தில், போராட்டத்தால் எந்தப்பலனும் கிடைக்காது என்று முதலாளித்துவ மற்றும் போலி கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் கூறுவார்கள். மேலும், இப் போராட்டத்தின் பலன்களை தலைவர்கள் எடுத்துக்கொண்டு தேர்தலில் ஆதாய மடைவார்கள். எனவே, இயக்கத்தில் எத்தனை பேர் பங்கேற்றனர், அவர்களில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர், போராட்டம் எந்த அளவிற்கு உக்கிரமாக நடந்தது போன்ற தகவல்களைத் தந்து கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கு அவ்வப்போது மக்களைத் தூண்டிக்கொண்டேயிருப்பார்கள். இது மட்டும் போதும்! மற்ற எதைப் பற்றியும் அக்கறையில்லை!

**இத்தகைய போராட்டங்கள் மீண்டும் மீண்டும் நடக்கும், இத்தலைவர்களும் தேர்தல் களத்தில் மீண்டும் நன்கு ஆதாயமடைவர்**

மக்களின் கோபம் எவ்வளவு பெரிய போராட்டமாக வெடித்தெழுந்தாலும், அதுவே புரட்சியாகிவிடாது. கிளர்ச்சியானது தானாகவே புரட்சியாக உருப்பெற்றுவிடாது. புரட்சி என்பதன் பொருள், தற்போதுள்ள அரசு கட்டமைவை வேறொன்றாக மாற்றுவதாகும். அதாவது, தற்போதுள்ள அரசைத் தூக்கியெறிந்து அதனிடத்தில் புதிய அரசை நிறுவுவ வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை முதலாளித்துவ அரசைத் தூக்கியெறிந்து சோஷலிச அரசை நிறுவுவதைத்தான் புரட்சி என்கிறோம். இதன் மூலமாக தற்போதுள்ள முதலாளித்துவப் பொருளாதார, அரசியல், சமூக கட்டமைவை (நிர்வாகம், ராணுவம், நீதித்துறை) மாற்றி அவற்றினிடத்தில் சோஷலிசக் கட்டமைவை நிறுவுவதாகும். இதைத்தான் நாம் புரட்சி என்கிறோம்.

... எனவே, கிளர்ச்சியும் புரட்சியும் ஒன்றல்ல என்பதை எப்போதும் நினைவிற்கொள்வீர்! இன்றைக்கு இல்லாவிடினும், இதே மக்கள், கடந்த காலத்தைப்போலவே மீண்டும் கிளர்ச்சிகர இயக்கமாக வெடித்தெழுவர். மக்களின் கோபம் சக்திவாய்ந்த இயக்கமாக மீண்டும் வெளிப்படும். ஆட்சியாளர்களால் தொடரப்படும் ஒடுக்கு முறையால் துன்பங்களை அனுபவித்து அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் திரும்பினாலும் கூட அவர்கள் மீண்டும் தேர்தல் அரசியல் களத்திற்குள்தான் இழுக்கப்படுவார்கள். தேர்தல் மூலமாக அரசாங்கத்தை மாற்றும் ஆட்சியாளர் களின் தந்திரத்தில்தான் மக்கள் வீழ்வார்கள். இது முதலாளித்துவ அமைப்பாக இருப்பதால், சுரண்டல், வேலையின்மை, கல்வியின் தரத்தில் வீழ்ச்சி, ஒழுக்கம் நீதிநெறி வீழ்ச்சி ஆகியன நாளுக்கு நாள் தொடர்ந்து கொண்டே இருக்கும். இதுபோன்ற போராட்டங்களின் மூலம் இப்பிரச்சினைகளின் நுனியைக்கூட உங்களால் தொடமுடியாது. ஆயிரத்தெட்டு தியாகங்கள் செய்தபோதினும், கோபத்தால் உந்தப்பட்ட கிளர்ச்சிகர இயக்கங்கள் மூலமாகவும், தியாகங்கள் வீரமரணங்கள் மூலமாகவும் மட்டுமே உங்களால் புரட்சியை நடத்திவிட முடியாது. புரட்சியை நடத்துவதற்கு, திட்டவட்டமான தெள்ளத் தெளிவான அரசியல் லட்சியத்தின் அடிப்படையில் உங்களை நீங்கள் அணி திரட்டிக்கொள்ள வேண்டும். அதாவது, அரசியல் விழிப்புணர்வோடு ஒருங்குதிரண்ட மக்கள் அமைப்பை உருவாக்க வேண்டும்.

... எனவே, புரட்சிகர அரசியல் சித்தாந்தம் அல்லது புரட்சிகரக் கருத்தியலின்மீது திடமான நம்பிக்கையை உருவாக்க வேண்டும். அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப்போது தன்னெழுச்சியாகத் தோன்றும் இயக்கங்களை நம்மால் சரிவர வழிநடத்த முடியுமானால், அதன்மூலம் மக்களுக்கு புரட்சிகர விழிப்புணர் வூட்டி, மக்களின் போராட்டக்கருவிகளாக மக்கள் கமிட்டிகளை வளர்த்தெடுக்கும்போதுதான்



**சிப்தாஸ் கோஷ்**

புரட்சியை நோக்கிய நீண்டநெடிய மக்கள் போராட்டத்தை வளர்த்தெடுப்பது சாத்தியமாகும். சித்தாந்தப் போராட்டத்தை நடத்தாமல் மக்களின் அரசியல் விழிப்புணர்வை கூர்மையாக்க முடியாது.

சித்தாந்தம் என்ற பதம் விரிவான உள்ளடக்கங்களைக் கொண்டதாகும். அரசியல் கொள்கைகள், தார்மீக ஒழுக்க நெறிகள், கோட்பாடுகள், நீதிநெறி, கலாச்சாரம் என மக்கள் இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட கேள்விகள் அனைத்தும் 'சித்தாந்தம்' என்ற பதத்திற்குள் அடங்கும். ஆனால் நம் நாட்டில் நடத்தப்படும் இயக்கங்களில் குறிப்பிட்டதொரு போக்கு தென்படுகிறது. 'நாம் போராடுவோம், கோஷங்கள் எழுப்புவோம், ஆனால் என்ன பேசுகிறோம் என்பதில் எவ்விதக் கட்டுப்பாடும் வைத்துக் கொள்ள மாட்டோம்! ஒழுக்கம், கலாச்சாரம் பற்றிய உணர்வுகள் தேவை எனக் கருத மாட்டோம், மரியாதையுடனான தன்னடக்கம் அவசியமில்லை! மற்றவர்களிடம் நடந்து கொள்வதில் அடக்கமும் நன்னடத்தையும் கொண்டிருக்க வேண்டிய அக்கறையில்லை!' இது போன்ற போக்குதான் இன்றைய இயக்கங்களில் காணப்படுகிறது. இது மிகுந்த கெடுதல் விளைவிக்கிறது.

சித்தாந்தப் போராட்டத்தை புறந்தள்ளிவிட்டு எதையும் சாதிக்க முடியாது. 'எதையாவது செய்யுங்கள், உங்களால் என்னவெல்லாம் முடியுமோ அதையெல்லாம் செய்யுங்கள், நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்' மக்களின் மனப்பான்மை இவ்வாறாக இருக்குமானால் நாட்டின் எதிர்காலம் பிரகாசமாக இருக்க முடியாது. இத்தகைய அணுகுமுறையின் தவிர்க்க இயலாத விளைவுதான் நாம் இந்நாட்டில் அவ்வப்போது கண்ட போராட்டங்களாகும்.

... நமது நாட்டில் இதுவரையில் இயக்கங்களுக்குத் தலைமை வகித்த கட்சிகள் அனைத்தும் அடிப்படையில் தேர்தல் நோக்குகொண்ட கட்சிகளாகும். அவர்கள் தங்களுக்கே உரிய பாணியில் இயங்கும் போலி மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் கட்சிகளாயினும், இடதுசாரி அல்லது வலதுசாரி 'கம்யூனிஸ்ட்' கொடியை ஏந்தியுள்ளோராயினும், இந்த 'இசம்' அந்த 'யிசம்' என்று ஏதேனும் ஒரு வாதத்துக்கு ஆதரவாகப் பேசினாலும், அவையனைத்துமே தேர்தல் நோக்கு கொண்ட கட்சிகள்தான்.

கொடூரமான அடக்குமுறையால் துன்புறுவது மக்களே; போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் மடிவது மக்களே; இவற்றுக்கு எதிராக கட்சிகள் பிரச்சாரம் செய்து தேர்தல் பிரசாரத்தில் ஆதாயமடைந்து, தேர்தல்களில் வெற்றியீட்டி, மாலை மரியாதைகள் பெற்று, அமைச்சர்களாகவோ வேறு ஏதேனும் பெரிய பதவிகளிலோ அமர்கிறார்கள். மக்கள் இயக்கத்தைப் பற்றி பெரும்பாலான கட்சிகள் கொண்டிருக்கும் மனப்பான்மை இதுவேயாகும்.

ஆனால், உண்மையிலேயே புரட்சிகரமான கட்சி, அரசியல் விழிப்புணர்வுடன் மக்கள் இயக்கங்களை நடத்தும் போக்கில், ஓரளவிற்கு மக்களின் அரசியல் விழிப்புணர்வையும் அரசியல் தலைமையையும் மக்கள் கமிட்டிகள் என்ற போராட்டக் கருவிகளையும் உருவாக்க விரும்புகிறது. இத்தகைய மக்கள் கமிட்டிகள் நிரந்தரமான அமைப்புகளாக இருக்காது. குறிப்பிட்ட மட்டத்தில் மக்களின் விழிப்புணர்வை நீடித்திருக்கச் செய்கின்ற வரையில் இக்கமிட்டிகள் வளரும். இயக்கம் முடிவிற்கு வந்தபின் இக்கமிட்டியும் இல்லாமற்போகும். இவ்வாறாக, ஒவ்வொரு இயக்கத்தின்போதும் ஓரளவிற்கு புரட்சிகர விழிப்புணர்வுடன் மக்கள் கமிட்டிகள் வளருமானால், இயக்கங்களைத் தாங்களாகவே வழிநடத்துவதற்கும் புரட்சிகரத் தலைமையை வளர்த்தெடுப்பதற்கும் மக்கள் கற்றுக் கொள்வார்கள்.

... இந்த உணர்ச்சிப் பெருக்கோடு அரசியல் விழிப்புணர்வையும் சாதுர்யத்தையும் மக்கள் கைவரப் பெறுவார்களேயானால் எந்த அளவிற்கு இந்த இயக்கத்தை முன்னெடுத்துச்செல்ல முடியும், எவ்வாறு அதை நடத்துவது என்பதை அவர்களாகவே தெரிந்து கொள்வார்கள். அப்போது தங்களுக்குத் தலைமைதாங்கும் கட்சிகளில் எவையெல்லாம் உண்மையிலேயே ஒழுக்க ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் தங்களை வழிநடத்துகின்றன, ஒத்துழைப்பும் ஆதரவும் நல்குகின்றன என்பதை அவர்கள் நன்றாகவே தெரிந்துகொள்ள இயலும். இந்த மெய்யுணர்வை அவர்கள் அடையும்போது போலியான புரட்சிகரக் கட்சிகள் மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போகும். ஜனநாயக மக்கள் இயக்கங்கள்பால் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி கொண்டுள்ள அணுகுமுறை இதுவேயாகும்.

.... இன்றைய நாட்களில் பலமான கம்யூனிச எதிர்ப்புணர்வோடு இயங்கும் எந்தவொரு ஜனநாயக இயக்கமும் உண்மையிலேயே ஜனநாயகமானதாக இருக்காது. ஒரு கட்சி மார்க்சிஸ்ட் கட்சியாக இல்லாமலிருக்கலாம். கம்யூனிஸ்ட் கட்சியாக இல்லாதிருக்கலாம், ஆனால் அது கம்யூனிசத்தை வெறுக்கும் கட்சியானால் இன்றைய நாளில் அக்கட்சி உண்மையிலேயே ஜனநாயகமான கட்சியாக இருக்க முடியாது. அதேபோல, ஏகாதிபத்திய எதிர்ப்பு காட்டாத எந்த கட்சியும் உண்மையிலேயே ஜனநாயகமானதாக இன்று இருக்கமுடியாது. எனவே, ஐக்கிய முன்னணி அமைப்பதற்கு முன்வருகின்ற கட்சிகள் பொதுவில் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுடையதாக, குறிப்பாக, அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுடையதாக இருக்கவேண்டியதும், மார்க்சிசம், லெனினிசம், கம்யூனிசக் கண்ணோட்டத்திற்கு குறைந்தபட்சம் அனுதாபம் கொண்டதாக இருக்க வேண்டியதும் அவசியமாகும்.

இன்றைய காலகட்டத்தில் மார்க்சிசத்திற்கு விரோதமாக இருந்துகொண்டு சமுதாயத்தை யாராலும் புரட்சிகரமாக மாற்ற முடியாது. ஏனெனில், இன்றைய காலகட்டத்தில் மார்க்சிசம் மட்டுமே விடுதலைக்கான பாதையை காட்டவல்லது. இதர சித்தாந்தங்கள் அனைத்தும் சித்தாந்தக் குழப்பங்களேயாகும்.

... மார்க்சிசம்–லெனினிசம்தான் மிக உயர்ந்த லட்சியமாகும். இக்காலகட்டத்தின் மிக உயர்ந்த சித்தாந்தம் அதுவே. இக்காலகட்டத்தின் மிக உயர்ந்த, மிகவும் முன்னேறிய ஒழுக்கம் மற்றும் நீதிநெறிக் கோட்பாடுகளை இந்த சித்தாந்தத்தில் தான் காண முடியும். இதைவிட உயர்ந்த சித்தாந்தம் வேறு எதுவும் கிடையாது.

...ஒரு புரட்சிகரக் கட்சியின் குணாம்சத்தைத் தீர்மானிப்பதற்கான அதிமுக்கியமான அளவுகோல் எது? நாட்டில் புரட்சியை நடத்துவதற்கு உகந்த வகையில் புதிய கண்ணோட்டம் ஒன்றை வளர்த்தெடுப்பதற்காக, வாழ்வின் அனைத்து

தொடர்ச்சி 6ம் பக்கம்

# கேரளா விழிஞ்ஞம் துறைமுக எதிர்ப்புப் போராட்ட வெற்றி மக்கள் இயக்க வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயம்

விழிஞ்ஞம் பன்னாட்டுத் துறைமுகம் கேரளத்தின் தலைநகரம் திருவனந்தபுரத்தில் அரபிக்கடல் ஓரத்தில் புதியதாக கட்டமைக்கப் பட்டுவரும் துறைமுகம் ஆகும். இது உலகின் மிகப்பெரிய துறைமுகங்களில் ஒன்றாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது. இத்திட்டம் முன்பு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் அதானி குழுமத்துடன் போடப்பட்ட சலுகை ஒப் பந்தத்தின்படி (Concession Agreement) 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சலுகைத் திட்டம் என்பது, தனியாரால் தொடங்கப்படும் திட்டத்திற்கு சில ஆண்டுகள் அரசு உதவிகளும் (நிதி), உரிமைகளும் வழங்குவதாகும்.

துறைமுகத் திட்டத்தை நடை முறைப்படுத்து வதன் மூலம் கடல் அரிப்பு ஏற்படும் என்கின்ற சுற்றுச்சூழல் நிபுணர்கள், துறைமுகத்தில் நிறுத்தப்படும் கப்பல்களை, அலைகள் மற்றும் புயல்கள் தாக்காமல் இருக்க கடலலை வரும் திசைக்கு செங்குத்தாக பிரேக்வாட்டர்ஸ் அதாவது பெரும் பாறை கற்களால் எழுப்பப்படும் சுவர் கட்டப்படுகிறது. இப்பிரேக்வாட்டர்ஸால் கடல் நீரோட்டத்தின் திசையே மாறியுள்ளது. இதன் விளைவாக அடிக்கடி கடல் சீற்றம், கொந்தளிப்பு கள் ஏற்படுவதால் கடலில் விபத்துகளும், சில நேரங்களில் உயிரழிப்புகளும் ஏற்படுகிறது என்கின்றனர். மேலும், சுற்றுச் சூழல் பாதிப்பைச் சரியாக, அறிவியல்பூர்வமாக கணிக்கவில்லை எனவும், எதிர்பார்த்ததைவிட இத்திட்டம் சுற்றுச் சூழலுக்கும் கடல்சார் உயிரி னங்களுக்கும் மீனவர்களின் வாழ்க்கைக்கும் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என சூழலியலாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கேரள அரசுக்கு உரிமையான விழிஞ்ஞம் பன்னாட்டுத் துறைமுக நிறுவனம் இப்புதிய துறைமுக கட்டுமானப்பணிகளை மேற்கொண்டு கட்டிமுடிப்பதுடன் அதை நடத்தும் ஒப் பந்தத்தையும் அதானி குழுமத்திற்கு வழங்கி யுள்ளது. இதனால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு அவர்களது வாழ்வாதாரமும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இந்த கடற்கரை ஓரக் கட்டுமானத்தால் கடல் அரிப்பு ஏற்பட்டு பல வீடுகள் கடல் நீரில் மூழ்கிவருகின்றன. இதனால் 284 குடும்பங்கள் தற்காலிக சிமெண்ட் குடோன் முகாம்களில் வசிக்கின்றனர். துறைமுகத் திட்டத்தால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது எனக் கூறும் 40 கிராமங்களைச் சேர்ந்த மீனவ மக்கள் துறைமுக எதிர்ப்புக் கடலோரக் கமிட்டிகள் அமைத்து கடந்த ஆகஸ்ட் 16 ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 31 வரை தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். தங்களுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும் என்பது உள்ளிட்ட 7 அம்சக் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் ஓயாது என்றும் உறுதியாக நின்றனர். போராட்டத்தில் குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் வயதானவர்கள் என மக்கள் அனைவரும் இறங்கி, கூடாரங்கள் அமைத்து தொடர் சாலை மறியல் செய்து வந்தனர். இவர்கள் மீது காவல்துறை கடும் தாக்குதலைப் பலவகைகளில் நடத்தியது. கேரள அரசாங்கமும் ஃபாசிச வழிமுறைகளைப் பின்பற்றி எதிர்க் கூடாரங்களை அமைத்து ஆயிரக்கணக்கான காவலர்களைக் குவித்து வன்முறையைக் கையாண்டது. சமீபத்தில் பெய்த கடும் புயல் மழையால் கடலரிப்பில் சிக்கிய பாழடைந்த வீடுகளிலிருந்து உயிரைப் பணையம் வைத்து மீனவர்களே மக்களைப் பேரிடரிலிருந்து காப்பாற்றினர்.

ஆனால் மீனவர்கள் சமூகத்தில் பலர் கிறிஸ்தவர்கள் என்பதாலும் இவர்களுக்கு ஆதரவாக சில பாதிரியார்கள் போராட்டத்தில் இறங்கியதாலும் போராட்டக்காரர்களை மதவெறியர்கள், இந்து மதத்திற்கு எதிரானவர்கள், என்று பாஜக ஒருபுறமும் பயங்கரவாதிகள் என சிபிஎம் (தேசாபிமானி நாளிதழ்) மறுபுறமும் சித்தரித்தன. 3000 மீனவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன. திருவனந்தபுரம் ஆர்க் பிஷப், முதல் குற்றவாளியாக பதிவு செய்யப்பட்டுள்ளார். மீனவர் போராட்டத்திற்கு மாநிலம் முழுவதும் மக்கள் ஆதரவு பெருகத் துவங்கியது. ஒடுக்குமுறை, தவறான தகவல்களால் திசைதிருப்பப்படல், அவமானம் உயிர் மற்றும் உடைமை இழப்பு ஆகிவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு சற்றும் தளராமல் 138 நாட்கள் போராட்டம் நடத்தியதால், கேரள அரசாங்கம் மீனவர்கள் வைத்த பல கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. ஆயினும் துறைமுகத் திட்டம் கைவிடப்படமாட்டாது என முதல்வர் பிரனய் விஜயன் அறிவித்துள்ளார்.

கேரள சிபி(எம்) தலைமையிலான இடதுசாரி அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் கார்போரேட் ஆதரவு திட்டங்களை முழு வேகத்தில் நடை முறைப்படுத்தி வருகிறது. அம்மாநிலத்தை செங்குத்தாக பிளவுபடுத்தும் கே ரயில் சில்வர்லைன் திட்டத்தை உலக வங்கியின் துணையுடன் அமுலாக்க நடவடிக்கை எடுத்தது. மக்கள் போராட்டத்தால் தற்காலிகமாக அதுவும் நிறுத்தி வைக்கப்பட்டது.

கேரயில் திட்டத்தைப் போலவே, துறைமுகத்தை எதிர்த்த நியாயமான போராட்டத்தை எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) ஆதரித்ததுடன் பல இடங்களில் அப்போராட்டத்தில் பங்கேற்றது. எல்லா கோரிக்கைகளும் அடையப் பெறா விட்டாலும், இந்த அளவிற்கு வெற்றியை ஈட்டி தற்காலிக அமைதியைப் பெற்ற விழிஞ்ஞம் துறைமுக எதிர்ப்புப் போராட்டத்தை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் கேரள மாநில கமிட்டி உளமாறப் பாராட்டி, கடலோரக் கமிட்டிகளுக்கு வீரவணக்கம் செலுத்துகிறது. போராட்டத்தின் வெற்றியை வெறுமனே எத்தனை கோரிக்கை களை வென்றோம் என்பதை வைத்து முடிவு செய்ய முடியாது. ஒடுக்கப்படும் மக்களிடையே சாதி, மத, இன வேற்றுமையை அகற்றி ஒற்றுமையை உருவாக்கி ஜனநாயக விழிப் புணர்வை ஏற்படுத்த முடிந்ததா, அவர்களின் விழிப்புணர்வும் சுய நம்பிக்கையும் உயர்ந்ததா என்பதுவே அதன் வெற்றியின் அளவுகோலாக இருக்க வேண்டும். இந்த விழிப்புணர்வும் நம்பிக்கையும் எதிர்காலத்தில் அடக்குமுறைக்கு எதிராக மக்கள் துணிந்து நிற்கவும் எதிரி யார் என்பதை தெளிவாக இனங்காணவும் வழி வகுக்கும் ■

# தோழர் புஷ்பேந்திர விஸ்வகர்மா அவர்களுக்குச் செவ்வணக்கம்!

எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் உத்திரப் பிரதேச மாநிலச் செயலாளரான தோழர் புஷ்பேந்திர விஸ்வகர்மா 7, செப்டம்பர் 2022 அன்று ஒரு சாலை விபத்தில் அகால மரணமடைந்தார். அவருக்கு வயது 57. அவரது மரணம் கட்சிக்கும் ஆதரவாளர்களுக்கும் அனுதாபிகளுக்கும் நாட்டின் முற்போக்கு இடதுசாரி இயக்கத்துக்கும் பேரிழப்பாகும்.

அவர் மாணவராக இருந்தபோது, அவரது தந்தையும் முன்னாள் மாநிலச் செயலாளருமான தோழர் சக்கரவர்த்தி விஸ்வகர்மா அவர்களின் வழிகாட்டலால் மாணவர் அமைப்பான ஏஐடிஎஸ்ஓவில் இணைந்து எண்ணற்ற மாணவர் இயக்கங்களைக் கட்டியதன் போக்கில் கட்சிக்கு மிக நெருக்கமானார். உயர்ந்த பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை, அறநெறியைக் கைவரப் பெற்றதுடன் தகுதிமிக்க அமைப்பாளராக தன்னை மாற்றிக்கொண்டு, கட்சி பணித்த வேலைகளைச் செவ்வனே செய்தார். தனது சிறு வயதிலேயே கம்யூனிச குணாம்சங்களை வளர்த்துக்கொண்டார். அதன் போக்கில் கட்சியின் நம்பிக்கைக்குரிய ஒரு தலைவருமானார்.

அவரது எளிமை மற்றும் இணக்கமான தன்மையால் அனைவரது நெஞ்சிலும் அவர் இடம் பெற்றார். கட்சி இலக்கியங்கள் கூடவே மார்க்சிய இலக்கியங்களையும் படிப்பதில் அவர் அதிக கவனம் செலுத்துவார். பிரச்சினைகள் ஏதும் எழுந்தபோது அவற்றை அவர் சரியாக்க கையாண்டார். மாபெரும் பாட்டாளிவர்க்கத் தலைவராகிய தோழர் சிப்தாஸ் கோஷின் படிப்பினைகளைச் சரியாகப் பிரயோகித்ததன் போக்கில் அவரது குடும்பத்தார், அவரது மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட அனைவரையும் அவரால் ஈர்க்க முடிந்தது. அவரது மகன் ஒரு முழுநேர கட்சி ஊழியரும் ஏஐடிஎஸ்ஓவின் மாநில அளவிலான தலைவருமாவார்.

தோழர் புஷ்பேந்திர விஸ்வகர்மா பல வெகுஜன இயக்கங்களை நடத்தியுள்ளார். குடியா எனும் ஒரு வளரிளம் பருவப்பெண் வன்புணர்வு செய்து கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றவாளிகளைக் கைது செய்து கடும் தண்டனை வழங்கக்கோரி உபி யின் பிரதாப்கர் எனுமிடத்தில் அவரது தலைமையில் வெகுஜனப் போராட்டம் நடத்தப்பட்டு அது வெற்றி பெற்றது.

தோழர் புஷ்பேந்திர விஸ்வகர்மா அவர்களின் துயரமிக்க அகால மரணத்தால் கட்சி ஒரு மதிப்புமிக்க தலைவரை இழந்துள்ளது. கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் வெகுஜன அமைப்பின் மாநிலத் தலைவர்கள், தொண்டர்கள், ஆதரவாளர்கள், அனுதாபிகள் மட்டுமல்லாது பெண்கள் உள்ளிட்ட அவரது அண்டை வீட்டார்கள் கண்ணீர் மல்க அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

தோழரது மறைவு நீண்ட காலத்துக்கு நம் நெஞ்சை விட்டு அகலாது. தோழர் புஷ்பேந்திர விஸ்வகர்மா அவர்களுக்குச் செவ்வணக்கம்! ■



**தோழர் புஷ்பேந்திர விஸ்வகர்மா அவர்களுக்குச் செவ்வணக்கம்!**

# தோழர் அனிஸ்குமார் ராய் அவர்களுக்கு செவ்வணக்கம்!

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மேற்கு வங்க மாநிலக் கமிட்டியின் மூத்த உறுப்பினரும், அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் முன்னணித் தலைவரும், கட்சியின் ஆங்கில இதழ் புரொலிடேரியன் எரா வெளியீட்டில் முக்கியப் பொறுப்பில் முனைப்புடன் செயலாற்றிய வருமான தோழர் அனிஸ்குமார் ராய், கடும் காசநோயால் அவதியுற்று சிறுநீரகம் செயலிழந்து மாரடைப்பால் நவம்பர் **28,2022** அன்று கொல்கத்தாவில் காலமானார். அவருக்கு வயது **79**.

தோழர் ராய், கட்சியின் மேற்கு வங்க மாநிலக் கமிட்டியின் மூத்த உறுப்பினர் தோழர் துருபஜோதி முகர்ஜியால் கட்சியில் **1960**களில் கட்சிக்கு அறிமுகமானார். அன்று, கட்சியின் இலக்கிய கலாச்சார அமைப்பின் இதழான பதிக்ரிதி உடன் இணைந்து முதலில் அவர் தனது புரட்சிகரப் பணியைத் துவங்கினார். அவரை இந்த அமைப்புடன் மேலும் நெருக்கமாகக் கொண்டுவர, கொல்கத்தாவில் அவரது பவானிபூர் இல்லத்திற்கு பதிக்ரிதியின் முன்னணி அமைப்பாளர் தோழர் அஷிஸ் மொய்த்ரா அடிக்கடி சென்று விவாதிப்பதுண்டு. இதன் மூலம் தோழர் ராய், கட்சியின் தற்போதைய மூத்த பொலிட்பிரோ உறுப்பினரும் அன்று பதிக்ரிதி சஞ்சிகையின் ஆசிரியருமான தோழர் மணிக் முகர்ஜியுடன் தொடர்பில் வந்தார். அன்றிலிருந்து புரட்சிப் பாதையில் முன்னோக்கி நகர்ந்த அவரது கால்கள் பழைய வாழ்க்கை முறைக்குத் திரும்பவேயில்லை.

தோழர் மணிக் முகர்ஜியின் மேற்பார்வையிலும் வழிகாட்டுதலிலும் மார்க்சிசம் லெனினிசம் சிப்தாஸ் கோஷ் சிந்தனையைக் கைவரப் பெற்று, ராய் பதிக்ரிதி கலச்சார அமைப்பில் மட்டுமல்லாது கட்சியிலும் விரைவில் ஆற்றால்மிக்க முன்னணி செயல்வீரராக தோழர் அனிஸ்குமார் ராய் உருவானார். பாட்டாளி வர்க்கத்துடனும் புரட்சியுடனும் கட்சியுடனும் ஐக்கியப்படுத்திக் கொள்ளும் போராட்டத்தைத் தீவிரமாக நடத்தி பதிக்ரிதி மற்றும் கட்சியின் பொறுப்புகளை சிரமேற்கொண்டு செவ்வனே நிறைவேற்றத் துவங்கினார். பதிக்ரிதி அமைப்புக் குழுவின் கட்சிப் பொறுப்பாளரானார். படிப்பிலும் மிகவும் சிறந்து விளங்கிய அவர் நிலயியல் அறிவியலில் முதுகலை பட்டம்பெற்றார். படிப்பாற்றல் மிகுந்த அவர் இளம் வயதிலேயே கொல்கத்தா வின் புகழ்பெற்ற பிரசிடென்சி கல்லூரியில் விரிவுரையாளரானார். தொன்மை நிலயியலில் முனைவர் பட்டம் பெற்றார். தனது துறையில் மிகுந்த அறிவுபடைத்த அவர் பயிற்றுவிப்பத்தில் தெளிவாக, எளிமையானவராக, அடக்கமானவராக, எளிதில் அணுகக்கூடியவராக விளங்கியதால் மாணவர்களுக்கு மிகவும் நெருக்கமானவரானார். வங்கம் மற்றும் ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதுவதில் தனிச் சிறப்புமிக்கவராக விளங்கினார். இதனால் ஆங்கில கலாச்சார இதழ்களான டிரென்ட், வங்க இதழான பதிக்ரிதி ஆகியவற்றில் அவரது கட்டுரைகள் அடிக்கடி பிரசுரமாயின. தோழர் மணிக் முகர்ஜியின் வழிகாட்டுதலில் கட்சியின் சித்தாந்தத்தில் ஆழமான புரிதல் பெற்று அவரது பேனா மேலும் கூர்மை பெற்றது. அன்றையதினம் புதிதாக அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தை அமைத்து அதன் போராட்டங்களில் ஈடுபட்டு அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கான இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றார். கட்சியின் வாழ்க்கையையும் தனது தொழில் வாழ்க்கையையும் இரண்டற ஒருங்கிணைத்து புரட்சிக்கு உதவும் வகையிலும் அதே சமயம் ஆசிரியர் இயக்கத்திற்கு உதவும் வகையிலும் தோழர் அனிஸ்குமார் ராய் வாழ்ந்தார்.

கட்சியின் சித்தாந்தத்தை நன்கு உள்வாங்கிக் கொண்ட தோழர் ராய் அவர்களின் எழுத்துக் கூர்மை அவரை கட்சியின் வங்கப் பத்திரிகை கனதாபியின் ஆசிரியர்குழுவில் இணைத்தது. கட்சித் தலைமையில் சில கட்சிப் புத்தகங்களையும் அவர் எழுதினார். கட்சியின் மூத்த பொலிட்பிரோ உறுப்பினர் தோழர் அசித் பட்டாச்சார்யாவின் மேற்பார்வையில் கட்சியின் ஆங்கிலப் பத்திரிகை புரொலிடேரியன் எராவில் கட்டுரைகளை எழுதத் துவங்கினார். கட்சியின் மீதும் அதன் தலைமை மீதும் அவர் கொண்டிருந்த விசுவாசம் அற்புதமானதாகும். அவரது கல்லூரி மாணவர்கள் உட்பட தன்னைவிட இளைய வயது தோழர்களின் கீழ் பணியாற்ற அவர் எக்காலும் தயங்கியதில்லை. இந்தக்குணம் நம் எல்லோருக்கும் கல்வி புகட்டுவதாகும். தனது அனைத்துத் திறனையும் பயன்படுத்தி கொடுக்கப்பட்ட பொறுப்புகளை சத்தமின்றி நிறைவேற்றும் அவரது அரிய குணத்தால் அவர் கட்சியின் சித்தாந்தப் போராட்டத்திற்கு மதிப்புமிக்க பங்களிப்பை வழங்கினார். தனது மனைவியையும் தங்கையையும் கட்சியில் இணைய எழுச்சியூட்டினார். அவரது பிள்ளைகளும் கட்சியின் ஆதரவாளர்கள் ஆவர். தனது குடும்பத்தின், மாணவர்களின் இதயத்தின், நண்பர்கள் வட்டாரத்தின் மையத்திற்கே கட்சியை அதன் சித்தாந்தத்தை எடுத்துச் சென்றார்.

நவம்பர் **2014** தோழர் அனிஸ்குமார் ராய் அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பாஜக மத்திய அரசாங்கத்தின் நாசகர கல்விக் கொள்கைகளை எதிர்த்த கல்வி இயக்கத்தை வழிநடத்துவதில் சிறந்த தலைமையை வழங்கிக் கொண்டிருந்தார். மிகப் பெரிய கல்வியாளர்கள், அறிவுஜீவிகள், சான்றோர்கள் ஆகியோரைக் கையாள்வதிலும் இணைந்து பணியாற்றுவதிலும் அவர்கள் மனம் கோணாவண்ணம் சாமர்த்தியமாகச் செயல்பட்டார். அவரது தலைமையில் கல்வி இயக்கம் பல மாநிலங்களுக்குப் பரவியது. அவரது வெற்றிகரமான செயல்பாட்டினால் மீண்டும் **2021**ல் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தனது நோயால் பீடிக்கப்பட்ட உடல்நிலையைப் பற்றிக் கவலைப்படாமல் கல்விப் பாதுகாப்பு இயக்கத்தை மேலும் வளர்த்து உறுதிப் படுத்துவதற்காக நாடெங்கிலும் பயணித்தார். மருத்துமனையில் படுக்கையில் இருந்து கொண்டும்கூட, கல்வி இயக்க இணையக் கருத்தரங்கங்களிலும், கூட்டங்களிலும், இலக்கியப் பணிகளிலும் இறுதிவரை ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.



**தோழர் அனிஸ்குமார் ராய்**

அடக்கம், தற்பெருமை சற்றும் இல்லாமை, குழந்தை இதயம், வாஞ்சை ஆகிய பண்புகள் அவரது அழகைக் கூட்டியது. அவரது அறிவின் ஆழத்தையும் புரட்சிகரக் குணங்களின் அளப்பரிய செழுமை ஆகியவற்றை வெளியிலிருந்து பார்ப்போரால் எளிதாகப் புரிந்துகொள்ள முடியாது. அவரது மவுனமான, உள்நோக்கியே சிந்திக்கும் தன்மையால் எந்த பொது நிகழ்ச்சியிலும் முன்னால் தெரிவதில் அவருக்கு சங்கோஜம் இருந்தது. ஆனால் கட்சி கேட்டுக்கொண்ட பொழுதெல்லாம் சங்கோஜத்தை விட்டு வெளிவந்து கட்சியின் முடிவை தயக்கமின்றி ஏற்று நடந்தார்.

அன்னாரது மறைவு கட்சிக்கு மதிப்புமிக்க முன்னணித் தோழரை இழந்தது மட்டுமின்றி கல்வி, கலாச்சார இயக்கங்களுக்கு திறன்வாய்ந்த அமைப்பாளரை இழந்ததாகும் ■

**தோழர் அனிஸ்குமார் ராய்**
**அவர்களுக்குச் செவ்வணக்கம்!**

# மக்கள் இயக்கங்களைப் பற்றிய . . .

4ம் பக்கத் தொடர்ச்சி

அம்சங்களையும் தழுவிய ஒருங்கிணைந்த அறிவின் அடிப்படையில், செயல்பாட்டுக்கான வழிகாட்டுதலை அக் கட்சி மக்கள் முன்பு முன்னிலைப்படுத்தியிருக்கிறதா, இல்லையா என்பதே அந்த அளவுகோல் ஆகும். அதாவது, சமுதாயத்தில் இன்னமும் நிலவுகின்ற பழமை மனப்பான்மையை விட்டொழிப்பதன் மூலம் பாட்டாளிவர்க்கப் புரட்சியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் உகந்த, உயர்ந்த, புதிய கலாச்சார நீதிநெறித் தரத்தை முன்னிலைப் படுத்துவதற்கு ஒரு கட்சியால் முடிந்திருக்கிறதா இல்லையா என்பதுதான் ஆகும். குறிப்பாகச் சொல்வதானால், கட்சியின் முன்னணியினராக விளங்கும் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிவின் அடிப்படை யிலான இப்புதிய கலாச்சாரம் மற்றும் நீதிநெறி மதிப்புகளை தங்களது சொந்த வாழ்வில் கடை பிடிப்பதற்கான போராட்டத்தைத் துவக்கி யுள்ளார்களா இல்லையா என்பதைத்தான் முதலில் பார்க்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அரசியல் புரட்சிக்கு முன்தயாரிப்பான கலாச்சாரப் புரட்சியை நடத்துவதற்கு அவர்கள் முனைப்போடு செயல்படுகிறார்களா இல்லையா என்பதாகும். அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார திட்டங்களை ஒருங்கிணைக்காமல் எந்த நாட்டிலும் புரட்சியை வெற்றிகரமாக்க முடியாது என்பதை ஒவ்வொரு உண்மையான மார்க்சிஸ்ட்–லெனினிஸ்டும் அறிவார்.

... மிக உயர்ந்த புரட்சிகரச் சித்தாந்தத்தின் ஜீவாத்மா, அதன் சாராம்சம், அதன் உட்கரு ஆகியன அச்சித்தாந்தத்தின் உயர்ந்த கலாச்சார, நீதிநெறித் தரத்தில்தான் பொதிந்துள்ளது என்பதை வரலாறு நமக்குக் காட்டுகிறது. அதேபோல், இன்றைய உயர்ந்த சித்தாந்தத்தைக் கடைப்பிடிக்கும் கம்யூனிஸ்டுகள் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தின் ஜீவாத்மா அல்லது உட்கருவை உட்கிரகித்து தன்னுள் இரண்டறக் கலந்திடச் செய்யவேண்டும். மன்னராட்சிக்கு எதிராக முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடந்த காலகட்டத்தில் அப்புரட்சி அடைந்த மனிதநேயக் கலாச்சாரம், நீதிநெறி மதிப்புணர்வுகளின் அதிகபட்ச மட்டத்தைக்காட்டிலும் கம்யூனிசத்தின் அடிப் படையிலான இன்றைய பாட்டாளி வர்க்கக் கலாச்சாரம் மிக உயர்ந்ததாகும்.

ஆகவே, இவ்வாறு தேவையான உயர்ந்த கலாச்சாரத் தரத்தை அடையாமல், அதாவது பாட்டாளிவர்க்க கலாச்சாரத் தரத்தை அடையாமல் புரட்சியின் கருத்தியலை சரிவர சீர்தூக்கிப் பாராட்டுவதற்கான திறனை அடையவோ அல்லது அக்கருத்தியலை மெய்யுணர்வாக உணரவோ ஒருவரால் முடியாது. இதனால்தான், வெகுஜனங்களின் புரட்சிகரப் போராட்டத்தில் லட்சக்கணக்கான மக்களை ஈடுபடுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த வாழ்க்கையை புரட்சிகரத் திசையை நோக்கிக் கொண்டு வருவதைத்தான் ‘புரட்சிகர அரசியலைச் சரியாகப் பிரயோகித்தல் அல்லது சரிவரச் செயல்படுத்துதல்’ என்பதன் பொருள் என்று கூறுகிறோம் ■

# நேதாஜியின் 125வது பிறந்த ஆண்டு . . .

1ம் பக்கத் தொடர்ச்சி

கம்யூனிஸ்ட் கட்சி என்று அறியப்பட்ட சிபிஐ (இன்றைய சிபிஐ (எம்), சிபிஐ (எம் எல்) தலைவர்கள் அன்று பிளவுபடாத சிபிஐயில் இருந்தனர்) நேதாஜி மீது பழி சுமத்தியது. அன்று காங்கிரஸ் அவரைத் துரோகி, இந்தியாவை ஜப்பானிடம் ஒப்படைக்க போராடுகிறார் என்றது. ஆனால், நாம் நடத்தும் சுதந்திரப்போராட்டத்தில் உதவுவதற்கு ஆட்சியைக் கைப்பற்றும் உள்நோக்கம் ஜப்பானுக்கு இருந்தால் எங்கள் துப்பாக்கிகள் ஜப்பானுக்கு எதிராகத் திரும்பும் என்பதை வெளிப்படையாகவே அன்றே நேதாஜி அறிவித்தார்.

“கோடிக்கணக்கான இந்திய மக்களின் பக்கம் நான் நிற்பேன், அவர்களின் விடுதலைக்காக என் உயிரையும் கொடுப்பேன். உண்மைக்கு மதிப்பிருக்குமானால் இந்த நாட்டு மக்கள் ஒரு நாளில் எனது உணர்வுகளைப் புரிந்து கொள்வார்கள்” (அக்னியுக் இதழ்) என்று நேதாஜி ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார். இவரது நாட்டுப் பற்றையும் தியாகத்தையும் சந்தேகித்து துரோகி என எப்படி அழைக்க அவர்களால் முடிந்தது?

நேதாஜியையும் நமது விடுதலை இயக்கத்தின் புரட்சியாளர்களையும் நினைவுகூர்வது அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எந்த அளவிற்கு அபாயமாயிருந்ததோ அதே அளவிற்கு இன்றைய ஆட்சியாளர்களுக்கும் அது அபாயமாகும். அவர்கள் பாவனைக்காக சில சிறுசிறு விழாக்களை நேதாஜியின் பிறந்த நாளன்று சம்பிரதாயமாக நடந்துகின்றனர்.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியா இருந்த காலத்தில் ஜனவரி 23ஆம் நாள் அளப்பரிய உத் வேகத்தையும், அன்பையும் மரியாதையையும் ஏற்படுத்தியது வழக்கம். ஏராளமான இளைஞர் கள் தாங்களும் சுபாஷ் சந்திரபோஸைப் போல் வரவேண்டுமென்று கனவு கண்டார்கள் ஆனால் இன்று சுதந்திர இந்தியாவில் எத்தனை பேர் அவரை நினைவில் வைத்திருக்கிறார்கள்?

சுதந்திரப் போராட்டக் காலத்தில் அன்று நேதாஜியை எதிர்த்த இந்துமகாசபா, காங்கிரஸ், சிபிஐ மற்றும் பிற அமைப்புகள் இன்றுவரை மக்களிடையே அவர்பால் இருக்கும் நல் லுணர்வை தமக்குச் சாதகமாக்கிச் சுரண்டிக் கொள்ள நயவஞ்சக முயற்சியில் ஈடுபடுவதை நாம் இன்று பார்க்கிறோம். குறிப்பாக பாஜக மத்திய அரசாங்கமும் பாஜக–ஆர்எஸ்எஸ் தலைவர்களும் நேதாஜி குறித்த உண்மையான கருதுக்களை மறைத்து நேதாஜி 125வது பிறந்த ஆண்டை விமர்சகையாகக் கொண்டாடப் போகிறோம் என அறிவித்து, மக்களைக் குழப்ப முயற்சிக்கின்றனர்.

அக்காலத்தில் பாஜக ஆர்எஸ்எஸ் அமைப்பின் முன்னோடியான இந்துமகா சபாவிற்கு எதிராக தீவிரப் போராட்டத்தை நேதாஜி நடத்த வேண்டியிருந்ததை நாம் மறக்க முடியாது. அரசியலிலிருந்து மதத்தைக் கண்டிப்பாக விலக்கிவைக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் விடுத்த நேதாஜியின் எச்சரிக்கையை நாம் மறக்க முடியாது. கோல்வால்கர் மற்றும் சாவர்க்கர் போன்ற ஆர்எஸ்எஸ் ஜனசங்கத் தலைவர்கள் நேதாஜியை “தேசத் துரோகி” என விவரித்தனர், 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போதும் நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தின் (INA) சுதந்திரப் போரின் போதும் ஆர்எஸ்எஸ் ஜனசங்கத் தலைவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு நெருங்கிய கூட்டாளியாகச் செயல்பட்டு, ஆங்கிலேய ராணுவத்தில் சேர இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தனர். இவற்றை நாம் மறக்க முடியுமா?

சுதந்திரப் போராட்டத்தில் நேதாஜியின் பாதையில் செல்லாமல் காந்தியத் தலைமையின் பின்னால் பெரும்பாலான மக்கள் சென்றதன் விளைவு, அதிகாரத்திலிருந்து ஆங்கிலேயர்கள் அகற்றப்பட்டு அந்த இடத்தில் இந்திய முதலாளிகள் அமர்ந்துவிட்டனர். சுதந்திரம் என்ற பெயரில் நம் நாட்டு மக்கள் பெற்றது இதுதான். ஆங்கிலேயர்களின் ஒடுக்குமுறைக் கறுப்புச் சட்டங்களும் கொள்கைகளும் மேலும் அதிகமாக மேலும் தீவிரமாக தொடர்ந்து மக்களைத் தற்போது சுரண்டிக் கொண்டிருக்கின்றன.

வரலாற்றிலிருந்து சரியான பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். அன்று ஊடகங்களின் பிரச்சாரத்தினால் நாட்டு மக்கள் தவறாக வழி நடத்தப்படாமல் இருந்திருந்தால், நேதாஜிக்கு எதிராக இந்திய முதலாளித்துவ வர்க்கமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளும் காந்தியத் தலைமையும் செய்த கேடுகெட்ட சதித்திட்டத்தை மக்கள் அடையாளம்காண முடிந்திருந்தால், அப்போது இந்தத் துயரம் நேர்ந்திருக்காது. ஆனால் நமது நாட்டில் தர்க்கத்திற்கும் உண்மைக்கும் சித்தாந்தத்திற்கும் மதிப்பளிக்காமை என்ற போக்கு வளர்ந்துவிட்டது. யாரை நம்மைக் காத்தருள்பவனாக முன்னிறுத்தி ஊடகங்கள் விளம்பரப்படுத்துகின்றதோ, யாரிடம் பணபலம் இருக்கின்றதோ, யார் ஏதாவது செய்து மக்கள் கூட்டத்தைக் கூட்டுகின்றனரோ அவர்கள் பின்னால் கண்மூடித்தனமாக செல்லும் போக்கு இப்போது வளர்ந்துவிட்டது. ஏராளமான பணத்தையும் ஊடக விளம்பரத்தையும் கொடுத்து இம் மனிதர்கள் பெரிய வியாபாரிகளாலும் தொழிலதிபர்களாலும், ஏன் ஆதரிக்கப் படுகிறார்கள் என எப்பொழுதாவது சிந்திக்கப் படுகின்றதா? இவ்வாறு ஆதரிக்கப்படுவது மக்கள் நலனுக்காகவா அல்லது சொந்தப் பிரபல்யத்திற்காக பணம் சேர்க்கும் சுயநல, குறுகிய கூட்டத்தாரின் நலனுக்கககவா? நாட்டு மக்கள் அறியாமையிலேயே கண்மூடித் தனத்தில் இருக்கவேண்டும், தாங்கள் சொல்வதை யெல்லாம் கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று இந்த நயவஞ்சகத் தலைவர்கள் விரும்புகிறார்கள். இவர்களின் சதியை முறியடிக்கும் தருணம் வந்துவிட்டது.

நேதஜியின் மகத்தான பங்களிப்பையும் சுதந்திரப் போராட்டத்தின் சமரசமற்றப் போக்கையும் முழுக்க முழுக்க இருட்டடிப்பு செய்ய, நமது நாட்டின் ஆளும் வர்க்கம் கடுமையாக முயற்சிப்பதையும் நாம் பார்க்கிறோம். எனவே, நமது நாட்டின் மிகச் சிறந்த புதல்வனான நேதாஜியின் 125வது ஆண்டு நிறைவு தருணத்தில் இந்த சமரசமற்றப் போராளியின் வாழ்க்கையை, போராட்டத்தை, அவரது கற்பித்தல்களைக் கொண்டு மக்களை எழுச்சியூட்ட அனைத்தையும் செய்தாக வேண்டும். எனவே நேதாஜியை மக்களிடம் கொண்டு செல்ல முன்னெடுக்கப் படும் உன்னதமான நிகழ்ச்சியில் எல்லா உறுப்பினர்களையும், தொண்டர்களையும், ஆதரவாளர்களையும் ஈடுபடுத்த எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி கேட்டுக்கொள்கிறது ■

# மகாகவி பாரதியார் பிறந்ததின விழா நிகழ்ச்சிகள் அனுசரிப்பு

**மகாகவி பாரதியின் 141 பிறந்த ஆண்டை அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம், அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம், அகில இந்திய மகளிர் கலாச்சாரச் சங்கம் சென்னை, தேனி ஆண்டிப்பட்டி, நெய்வேலி ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்**



**ஆண்டிப்பட்டி, தேனி**



**வியாசர்பாடி, சென்னை**

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# அரசுப் பள்ளிகளைக் கைகழுவும் நம்ம ஸ்கூல் திட்டம்

நம்ம ஸ்கூல் திட்டம் என்பது அரசுப் பள்ளிகளை அரசு கைவிடும் மற்றும் அதிரடியாகத் தனியார்மயமாக்கும் ஒரு வஞ்சகத் திட்டம் என்பதால் அதனை உடனடியாகத் திரும்பப் பெற அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் குழு (தமிழ்நாடு) வலியுறுத்துகிறது.

தமிழக அரசாங்கம் நம்ம ஸ்கூல் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை அறிவித்த கையோடு அதை அதிரடியாக நடைமுறைக்கும் கொண்டு வந்துள்ளது.

தனியார் தொழில் நிறுவனங்கள் அரசுப் பள்ளிகளை நேரடியாகத் தத்தெடுக்கலாம், பல்வேறு கட்டுமான அமைப்புகளை ஏற்படுத்தித் தரலாம் அல்லது முன்னாள் மாணவர்கள் அரசுப் பள்ளிகளுக்கு உதவலாம் என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தனியார் நிதிப் பங்களிப்பபைப் பெற்று அரசுப் பள்ளிகளையும் அதன் கட்டுமானத்தையும் பலப்படுத்தப் போவதாகவும் மாணவர்களுக்குச் சிறந்த கல்வி அளிக்கப் போவதாகவும் காண்பிக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகளுக்கு நிதி அளிக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கே உள்ளது என்பது ஒருபுறமிருக்க, தனியார் நிதிப் பங்களிப்பை அரசாங்கம் கோருவதை ஒரு வாதத்திற்காக நாம் ஏற்றுக் கொண்டாலும்கூட, அந் நிதிப் பங்களிப்பைப் பெற்று அதை அரசாங்கமே நிர்வாகம் செய்யும் இடத்தில் இருந்தால் நிலைமை வேறு. ஆனால் நம்ம ஸ்கூல் திட்டத்தில் தனியார் நிதிப் பங்களிப்பை நிர்வகிக்கக்கூடிய பொறுப்பையும் தனியார் கையில் கொடுத்திருப்பதானது அரசுப் பள்ளிகளை நிச்சயமாக தனியார்மயத்தை நோக்கி இட்டுச் செல்லும் என்பது கேள்விக்கு அப்பாற்பட்ட வகையில் இருக்கிறது.

மேலும், பல ஆயிரக்கணக்கான ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், வகுப்பறைகள் கழிவறைகள் உள்ளிட்ட பல்வேறு பள்ளிக் கட்டுமான அமைப்புகள் சிதைவுற்றிருக்கும் நிலையில், தொகுப்பூதியத்தின் அடிப்படையில் தற்காலிகப் பணியில் ஆசிரியர்கள் பணியாற்றிவரும் நிலையில், நிரந்தர அடிப்படையில் ஆசிரியர்களைப் பணி நியமனம் செய்யாத நிலையில், அவற்றையெல்லாம் சரி செய்ய அரசு போதுமான நிதி ஒதுக்கி ஆவண செய்யும் என ஆசிரியர்களும் பெற்றோர்களும் பொதுமக்களும் எதிர்பார்த்திருந்த வேளையில் அரசுப் பள்ளிகளைக் கைகழுவி படிப்படியாகத் தனியார்வசம் ஒப்படைக்கக் கூடிய விதத்தில் நம்ம ஸ்கூல் திட்டம் அமல்படுத்தப்பட்டிருப்பது கல்வி மீது அக்கறை கொண்ட அனைவரையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

**1990**களில் கொண்டுவரப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம், அனைவருக்கும் கல்வித் திட்டம் (SSA) உள்ளிட்டவை பொது மற்றும் தனியார் பங்களிப்பு (Public Private Partnership – PPP) என்ற பெயரில் அரசுப் பள்ளிகளை படிப்படியாகத் தனியார் வசம் ஒப்படைக்க பல்வேறு செயல்முறை நடவடிக்கைகளை ஏற்கனவே தொடர்ந்து எடுத்து வந்தன.

அதன் தொடர்ச்சியாகவும் நீட்சியாகவும் கொண்டுவரப்பட்ட தேசிய கல்விக் கொள்கை **2020**இல் கூறப்பட்டுள்ளது போல், அரசுப் பள்ளிகளை மேம்படுத்துவதற்காக தனியார் சமூகப் பங்களிப்பு (Corporate Social Responsibility) என்ற வகையில் அரசுப் பள்ளிகளை தத்தெடுக்கலாம் என்றும் முன்னாள் மாணவர்கள் அரசுப் பள்ளிக்குப் போதுமான நிதி உதவி செய்யலாம் என்றும் அதே அம்சங்களைப் பின்தொடர்ந்து நம்ம ஸ்கூல் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது.

இந்த நம்ம ஸ்கூல் திட்டம், மக்கள் வரிப்பணத்தில் இதுநாள் வரை செயல்பட்டு வந்த அரசுப் பள்ளிகள் மீதான இறுதித் தாக்குதல் ஆகும். தமிழ்நாட்டில் இருக்கும் கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களின் ஒரே நம்பிக்கை ஆதாரமாகத் திகழ்ந்துவரும் அரசுப் பள்ளிகளைப் படுவேகமாகத் தனியார்மயமாக்கும் இந்த முயற்சியை அகில இந்திய கல்விப் பாதுகாப்பு குழுவின் தமிழ்நாடு பிரிவு வன்மையாகக் கண்டிக்கிறது. இத்திட்டத்தைத் தமிழக அரசாங்கம் உடனடியாகத் திரும்பப்பெறவும் வலியுறுத்துகிறது.

தமிழகத்தை ஆளும் திமுக அரசாங்கம் தேசிய கல்விக் கொள்கை **2020**யை எதிர்ப்பதாக கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தது. அதற்கு மாற்றாக, பொதுமக்களின் நிர்ப்பந்தத்தால், மாநில கல்விக் கொள்கையை உருவாக்க ஒரு உயர்மட்டக் குழுவையும் நிறுவியது. அந்த உயர்மட்டக் கல்விக் குழு ஒரு மாற்றுக் கல்விக் கொள்கையை உருவாக்கித் தருவதற்கு முன்பாகவே தேசிய கல்விக் கொள்கை **2020**இன் பல்வேறு அம்சங்களான இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும் திட்டம், திறன் மேம்பாடு என்ற நான் முதல்வன் திட்டம் போன்றவற்றைப் பல்வேறு எதிர்ப்புகளுக்கும் இடையில் தமிழக அரசாங்கம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வருகிறது. இவ்வாறு மத்திய பாஜக அரசாங்கம் கொண்டு வந்த தேசிய கல்விக் கொள்கை **2020**ஐ இந்தியாவில் வேறு எந்தவொரு மாநிலத்தை விடவும் தமிழகத்தில் படுவேகமாகத் திமுக அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மக்களின் கல்வி உள்ளிட்ட அடிப்படை தேவைகளுக்காகப் போராடிய மாபெரும் மனிதர்களான பாரதியார், வ உ சிதம்பரனார், நேதாஜி, பகத்சிங் போன்றோர் தமது இன்னுயிரைத் தியாகம் செய்து பெற்ற சுதந்திரத்தின் பலனாகவே நாடு முழுவதும் பொதுமக்கள் வரிப்பணத்தில் அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் என கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப் பட்டன. மக்கள் வரிப்பணத்தில் உருவான அரசுக் கல்வி நிறுவனங்களை, பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்து அவற்றைச் செழித்தோங்கச் செய்யப் போதுமான நிதியை மாநில அரசாங்கம் ஒதுக்குவதே நியாயமாகும்.

அதை விடுத்து தனியார் நிறுவனங்களுக்கு மக்களின் பொதுச் சொத்தாகத் திகழும் அரசுப் பள்ளிகளைப் படிப்படியாகத் தாரை வார்க்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ள நம்ம ஸ்கூல் திட்டம் ஒரு அபாயகரமான வஞ்சகத் திட்டமாகும். கல்வியை நேசிப்போர், நல்லெண்ணம் கொண்டோர் நம்ம ஸ்கூல் திட்டத்தை எதிர்க்க முன்வர வேண்டும். இந்தத் திட்டத்தை திரும்பப் பெறும் வகையிலும் கோடானு கோடி ஏழை எளிய மக்களுக்குக் கல்வியை உத்திரவாதப்படுத்த அரசுப் பள்ளிகளுக்கு அரசே போதுமான நிதி ஒதுக்குவதை உறுதி செய்து அரசு கல்வி நிறுவனங்களைப் பாதுகாத்திடும் வண்ணம் ஒரு ஒன்றுபட்ட மக்கள் இயக்கத்தைக் கட்டமைக்க முன்வருமாறு சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களையும், குறிப்பாக ஆசிரியர் சங்கங்களையும், மாணவர் சங்கங்களையும் அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் குழு, தமிழ்நாடு அறைகூவி அழைக்கிறது ■

**“அநீதியை எதிர்க்கமுயன்று ஒருவர் சிறை சென்றாலோ அல்லது அவர் தண்டிக்கப் பட்டாலோ அவர் தனக்குத்தானே தீங்கு விளைவித்துக் கொண்டாலோ அந்தத் தியாகத்திற்காக அவர் பெறும் தண்டனை யின் மூலம் அவர் மனிதத் தன்மையின் பெருமைக்குரிய இடத்திற்குரியவராகிறார்... பள்ளி, கல்லூரி, தெரு, வீடு என்று எங்கெல்லாம் அநீதியையும் கேடுகளையும் தவறுகளையும் நீங்கள் காணநேர்கிறதோ துணிவோடு அவற்றை எதிர்த்து நில்லுங்கள். எனது வாழ்கையில் என்னால் ஏதேனும் பலம் பெற முடிந்திருக்கிறதென்றால் அது இந்த செயல்முறையின் மூலம்தான்”**

**நேதாஜி**

**இளைஞர்களின் கனவு**



## வாசகர்கள் கவனத்திற்கு

மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் 125வது பிறந்த ஆண்டு நிறைவு நிகழ்ச்சியை டிசம்பர் 31, 2022 அன்று அகில இந்திய நேதாஜி 125வது பிறந்த ஆண்டு விழாக் கமிட்டி இணையதள வழியில் நடத்தியது. அதில் நேதாஜியின் மகள் டாக்டர் அனிதா போஸ் மற்றும் டாக்டர் சுமித்ரோ பானர்ஜி பேராசிரியர், கொல்கத்தா ஆகியோர் உரையாற்றி னார்கள். அதனைக் கீழ்க்கண்ட யுடியூப் மற்றும் ஃபேஸ்புக் இணைப்புகளில் காணலாம்.

**https://youtu.be/v1sUyR4mTYU**

**https://fb.me/e/2YD6hn35D**

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094,* ***ஆசிரியர்: ஆ ரெங்கசாமி***

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**